மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 620 படுக்கைகள்.

(இ) தற்பொழுது இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் காசநோய் அகற்றுவதற்கு எவ்வளவு முயற்சி எடுத்தாலும், தாம்பரம் அதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது, நல்ல முறையில் அந்த இடம் அமைந்து இருக்கிறது என்று சொல்லப்படுவதால், அந்த இடத்திலேயே மேலும் விஸ்தரிப்பு செய்ய அரசாங்கம் திட்டங்களை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, காசநோய் சிகிச்சைக்குத் தாம்பரம் தான் ஏற்ற இடம் என்ற கருத்து சொல்லப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தில் செங்கிப்பட்டி என்ற இடத்திலும், ஈரோடுக்கு அருகில் பெருந்துறையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இடத்திலும், காரைக்குடிக்கு அருகில் ஒரு இடத்திலும் இப்படிப்பட்ட மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாம்பரத்திலேயே அதிக படுக்கைகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்வது தவறு. அண்மைக் காலத்தில் மருத்துவர்கள் ஆராய்ச்சியினால் காசநோய்க்கு தொடர்ந்து ஒரு ஆண்டுகாலம் சிகிச்சை பெற்றால், வேலை செய்து கொண்டே கூட அவர்கள் அந்த நோயைத் தடுத்து நிறுத்திக்கொள்ள முடியும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஒரு காலத்தில் காசநோயை குணப்படுத்தவேண்டுமென்றால் உடம்பில் ஊறும் பலத்தை வைத்துக்கொண்டு தான் அதைத் தடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும் என்ற முறையில் மருத்துவ மனையில் தங்கி இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது சரியான முறையில் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதால், வீட்டிலிருந்தே கூட அந்த மருந்தை 1, 2 ஆண்டுகள் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் அதைக் குணப்படுத்தமுடியும், அந்த நோயை எதிர்த்து நிற்க முடியும். தமிழ் நாட்டில் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாகவும், மருத்துவமனைகள் மூலமாகவும் சிகிச்சை அளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ; சிகிச்சைபெற ஊக்குவிக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள காச நோய் மருத்துவமனைகளை அரசாங்கமே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா ? திருச்சியில் உள்ள தனியார் மருத்துவ மனையை . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேட்பது மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. சம்பந்தப்பட்ட கேள்வி ஒன்று

1973 மார்ச் 3]

கேட்டால் போதாதா? திருச்சியைப் பற்றியும் இந்த கேள்வியிலே கேட்க வேண்டுமா? தனிக்கேள்வி போடவும் என்று தான் அமைச்சர் அவர்கள் பதில் கூற முடியும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது தனிக்கேள்விக்கு உரியது. எல்லா மருத்துவ மனைகளுக்கும் அரசு உதவி வழங்கி வருகிறது. அந்த உதவியின் அடிப்படையில்தான் தனியார் நிறுவனங்களும் அரசுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: தாம்பரத்தில் 620 படுக்கைகள்தான் இருக்கின்றன என்று சொன்னார்கள். இது மிகக்குறைவானது. பல நோயாளிகள் மனு செய்து, அவர்கள் அடுத்த உலகத்திற்குப் போனதற்குப் பிறகு, இங்கே வந்து சேரலாம் என்று பதில் வருகிறது. நோய் துவக்கத்தில் இருந்தால் மருந்து கொடுத்து தீர்த்து விடலாம். முற்றிய நோய் உள்ளவர்கள்கூட இந்த ஹாஸ்பிடலில் இடம் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அம்மையாரைப் போன்றவர்களுக்கு எப்போதுமே நெருக்கடி தீராது. ஓட்டேரியில் உள்ள மருத்துவ மனையில் காசநோய்ப் படுக்கைகள் இருக்கின்றன. அதேபோல், பொது மருத்துவ மனைகளிலும் காசநோய்க்கென்றே படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையிலும் 10 படுக்கைகள் அதற்கென்றே ஒதுக்கப்படவேண்டுமென்று அரசு கருதியிருக்கிறது. இப்படி மருத்துவ வசதி பரவலாக அளிக்கப்பட்டு வருகிறது. ஒரேயடியாக ஒரு இடத்தில் வசதிகளைக் குவித்து வைப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, இந்த நோயைக் குணப்படுத்த வைத்திய நிபுணர்கள் அதிகமாகத் தேவைப்படுகிற அளவுக்கு இல்லை என்று கூறுகிறார்கள். வைத்திய நிபுணர்களுக்கு ஊக்கம் அளித்து, அவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மருத்துவத் துறையில் உள்ள ஒரு குறைபாடு, தொண்டு மனம் கொண்ட மருத்துவர்கள் பல பேர் முன் வருவது இல்லை. அந்தத் துறையைப் பொறுத்தவரையில் அது ஒரு குறைபாடு. காசநோய் நோயாளிகள் பெரும்பாலும் ஏழைகளாக இருக்கிறார்கள். ஏழைகள் சிகிச்சை செய்துகொள்ள போதிய வசதி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு ஆராய்ச்சித் துறை வளர்ந்து விட்ட காரணத்தால்,